செ.வெ.எண்: 50 நாள்: 17.03.2017

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் குடிநீர் திட்டப்பணிகளை அலுவலர்கள் விரைவாக முடிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

தமிழகஅரசு கோடை காலத்தில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் திருப்புனவாசல் ஊராட்சி, கண்ணமங்கலம் பாம்பாற்றில் வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.21.60 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு பணியையும், கரூர் ஊராட்சி, விளாங்காட்டூரில் வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் செங்கானம் ஊராட்சி, பேயாடிகோட்டையில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றும் பணியையும் பார்வையிடப்பட்டது.

கண்ணமங்கலம் பாம்பாற்றில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மூலம் திருப்புனவாசல், செங்கானம் மற்றும் புத்தாம்பூர் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த சுமார் 6123 பொது மக்கள் பயன்பெறுவார்கள். இதே போன்று விளாங்காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மூலம் கரூர், பொன்பேத்தி மற்றும் காவாத்துக்குடி ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த சுமார் 7000 பொது மக்கள் பயன்பெறுவார்கள். இந்த ஆய்வின் போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் குடிநீர் தொட்டி, மோட்டார் அறை மற்றும் குடிநீர் குழாய்களை அமைக்கும் பணிகளை விரைவாக முடித்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்யவும், சீமைக்கருவேல மரங்களை அடியோடு அகற்றவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவாக்ள் தீயூர் ஆவணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவினை சாப்பிட்டு ஆய்வு செய்தார். மேலும் மாணவ, மாணவிகளின் கல்வித்தரத்தினையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**